<u>தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>

செய்தி வெளியீட்டு எண்: 115/2024 நாள்: 09.10.2024

## <u>செய்திக்குறிப்பு</u>

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்: 09/2024, நாள் 26.07.2024-ன் வாயிலாக அறிவிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் (நேர்முகத்தேர்வு அல்லாத பதவிகள்) அடங்கிய பதவிகளுக்கான **கொள்குறிவகைத் தேர்வு (கணினி வழித் தேர்வு, OMR முறைத் தேர்வு) மற்றும் விரிந்துரைக்கும் வகைத்தேர்வு** 14.10.2024 முதல் 23.10.2024 (19.10.2024 மற்றும் 20.10.2024 நீங்கலாக) மற்றும் 26.10.2024 முற்பகல் மற்றும் பிற்பகலில் 38 மாவட்ட தேர்வு மையங்களில் நடைபெற உள்ளது.

தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகள் (Hall Ticket) தேர்வாணையத்தின் இணைய தளமான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவேற்றம் (OTR) மூலமாக மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

அ. ஜான் லூயிஸ், இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்